செ.வெ.எண்:342 நாள்:10.06.2019

**கந்தர்வக்கோட்டை அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் முதலாமாண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பட்டய படிப்பிற்கான இரண்டாம் கட்ட கலந்தாய்விற்கு விண்ணப்பிக்கலாம்.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

கந்தர்வக்கோட்டை அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் முதலாமாண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பட்டய படிப்பிற்கான இரண்டாம் கட்ட கலந்தாய்விற்கு விண்ணப்பிக்கலாம். இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

2019-20 ஆம் கல்வியாண்டிற்கான கந்தர்வக்கோட்டை அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் மாணவ, மாணவிகளுக்கு ஏற்கனவே முதல் கட்ட கலந்தாய்வு முடிந்தது. நேரடி இரண்டாம் ஆண்டு மற்றும் முதலாமாண்டு பட்டய படிப்பிற்கான இரண்டாம் கட்ட கலந்தாய்விற்காக தற்போது விண்ணப்பம் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

நேரடி இரண்டாமாண்டு துறை வாரியாக காலியிடத்திற்கு விண்ணப்பிக்க ஜீன் 12 ஆம் தேதி கடைசி நாளாகும். மேலும் நேரடி இரண்டாமாண்டு மாணவர் சேர்க்கை ஜீன் 14 ஆம் தேதி நடைபெறவுள்ளது.

அமைப்பியல் துறையில் 6 இடமும், மின்னியல் மற்றும் மின்னணுவியல் துறையில் 01 இடமும், மின்னணுவியல் மற்றும் தொடர்பியல் துறையில் 7 இடமும், கணினி அறிவியல் துறையில் 19 இடமும் காலியாக உள்ளது. இயந்திரவியல் துறையின் இடங்கள் பூர்த்தியாகி விட்டன. அதே போன்று முதலாமாண்டு துறை வாரியாக காலியிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு விண்ணப்பிக்க வரும் ஜீன் 28 ஆம் தேதி கடைசி நாளாகும்.

முதலாமாண்டு மாணவர் சேர்க்கை வரும் ஜீன் 29 ஆம் தேதி ஆகும். இதற்கான காலியிடங்கள் அமைப்பியல் துறையில் 27 இடமும், மின்னணுவியல் மற்றும் தொடர்பியல் துறையில் 11 இடமும், கணினி அறிவியல் துறையில் 43

இடமும் காலியாக உள்ளது. இயந்திரவியல் துறை மற்றும் மின்னியல் மற்றும் மின்னணுவியல் துறையில் இடங்கள் பூர்த்தியாகி விட்டன. மேலும் விபரங்களுக்கு அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி, புதுப்பட்டி, கந்தர்வக்கோட்டை 613301 என்ற முகவரியில் நேரிலோ அல்லது 04322 - 275288, 275289, 275290 என்ற தொலைபேசியிலும், www.gptcgkt.in என்ற இணையதளத்தில் விபரங்கள் தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**